8th March 1965]

பிடிக்கப்பட்டு அதன் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. ஆகவே இந்த ரிபேட் முறையை, இப்போது கொடுக்கப்படுகிற முறையை, மாற்றி வேறு முறையில் நெசவாளர்களுக்கு உதவி செய்வதற்கான முறையை ஏற்படுத்த ஏதாவது உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நெசவாளர் சங்கங்களிடம் இருந்து அந்தவிதமான கோரிக்கைகள் வருமானால் சர்க்கார் பரிசீலனை செய்யும். இப்போதுள்ளபடி இந்த முறைதான் நல்லது என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

Financial assistance to weavers

* 177 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the nature of help rendered by the Handloom Finance Corporation to weavers; and

(*b*) the number of weavers benefited so far?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இது வரை ஒன்றும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

இந்தக் கேள்விக்கு பதில் எழுதிய பிறகு, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிலிருந்து காஷ் க்ரெடிட் நடைமுதல் பணம் 2 கோடி ரூபாய் இந்த கார்ப்பரேஷனுக்கு வழங்கியிருக்கிறார்கள். ஆகவே இப்போது கடன் கொடுக்கத் தொடங்கி விடும்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : இரண்டு கோடி ரூபாய் கடன் வழங்கியிருப்பதாகவும், கடன் கொடுக்கத் தொடங்கியிருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதனுடைய விவரத்தைச் சுருக்கமாக வெளியிடுவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனிக் கேள்வி கேட்டால் ஒரு அறிக்கை மேஜை மீது வைக்க முடியும். விவரங்களை வாயால் சொன்னால் ஒன்றுக்கு ஒன்று விட்டுப்போய் விட்டால் பிரசுரம் ஆகும்போது தவறான பிரசுரம் வந்துவிடும் என்று அஞ்சுகிறேன்.

Spinning mill (Kanyakumari district)

* 178 *Q.*—SRI A. KUNJAN NADAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether sanction has been accorded for the opening of a spinning mill in Kanyakumari district in the private sector; and

(*b*) whether the mill has started functioning?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Government of India have issued a licence for the establishment of a cotton spinning mill with 12,000 spindles in the private sector in Kanyakumari district.

(*b*) The mill has not been established yet.

[8th March 1965

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்த ஸ்பின்னிங் மில் ஏற்படுத்து கிற விஷயத்தில் எல்லா மாவட்டங்களிலும் கொடுத்திருக்கிற லைசென்சுகளை லைசென்ஸ் பெற்றவர்கள் சீக்கிரமாகப் பயன்படுத்தா மல் காலதாமதப்படுத்தி வருகிறார்கள். ஆகவே இவ்வளவு காலத்திற்குள் அந்த மில்லை ஏற்படுத்த வேண்டும். இல்லை என்றால் அந்த மில்லுக்குக் கொடுத்த லைசென்சை ரத்து செய்ய வேண்டு மென்று, அரசாங்கம் லைசென்ஸ்தாரர்களை வற்புறுத்துமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போதே மத்திய சர்க் கார் லைசென்ஸ் கொடுக்கிற விதிகளை கனம் அங்கத்தினர் அவர்கள் பார்த்தால் தெரியும். ஆறு மாதங்களுக்குள்ளாக உடனடியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஒரு வருடத்திற்குள்ளாக இன்னின்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அதில் கண்டிருக்கிறது. அவ்வாறு எடுக்காவிட்டால் ரத்து செய்வதற்கு மத்திய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது.

Sri R. PONNAPPA NADAR : Sir, may I know whether there is any proposal to cancel that licence and grant it to some other person because it has exceeded the time-limit?

The Hon. Sri R. VENKATARAMAN : Sir, the Madras Government are very reluctant to cancel any licence. We are anxious that all the licences that are granted to this State should be implemented. We know that there has been delay in the implementation of this licence and the Government are endeavouring their best to see that the licence is implemented.

திரு. டி. கார்ச்சா கவுடர் : எல்லா மாவட்டங்களிலும் நூற்பு மில்கள் அமைப்பதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் நீலகிரி இந்த காட்டிகரியில் வரவில்லை. கோவையில் இருந்து நீலகிரியில் மில் ஆரம்பிக்க இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு விண்ணப்பம் போட்டிருந்தார்கள். அதை அமைச்சர் அவர்கள் அனுதாபத்தோடு கவனித்து இந்த ஆண்டு அங்கு மில்கள் ஏதாவது ஆரம்பிக்க உத்தேசிப்பாரா ?

The Hon. Sri R. VENKATARAMAN : Sir, this is a request. The Government will always bear in mind all the requests made in this House.

Cholera (North Arcot district)

*179 Q.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether information has been received about the incidence of Cholera in North Arcot district;

(b) if so, the details thereof; and

(c) whether accommodation has been made available in all ten taluk hospitals for treatment of Cholera patients?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.